Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 20    (04-01-1992)    சனிக்கிழமை    ஓசை: 320

## தற்காலிக ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது தெரிவு செய்யப்படவுள்ள தற்காலிக ஆசிரீயர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் எனவும் இவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பாடசாலைகளில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் எனவும் யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் தெரிவித்தார்.

க. பொ, த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந் (3 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனரல் ஹமில்டன் வடபகுதி விஜயம்

# இராணுவ யுக்திபற்றி விளக்கம்

## வருட இறுதிக்குள் வெல்ல முடியுமாம்

(கொழும்பு)

சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கடந்தவாரம் வடபகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டதோடு, யுத்தத்தின் போது இராணுவத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் யுத்த தந்திரோபாயங்கள் பற்றியும் படை அணிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இந்தப் பயணத்தின் போது அவர் பலாலி, ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, மன்னார், தள்ளாடி, நானாட்டான், சிலாவத்துறை, தலைமன்னார், கொண்டச்சி, பூநகரி, ஆனையிறவு, திரியாய் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களுக்கு விஜயம் செய்தார். அங்கு இராணுவத்தினர் மத்தியிலும்உரையாற்றினார்.

ஆயுதங்கள் வாங்க அரசு ஒவ்வொரு ஆண்டும் அதிகமான பணம் செலவிடுகிறது. ஆகவே தேவை அற்ற துப்பாக்கிச் சூடு நடாத்த வேண்டாம் என்று இராணுவத்தளபதிஹமில்டன்வனசிங்காதனது இராணுவப் படையணிக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கெதிராக நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவ தளபாடங்களை விரயமாக்கவேண்டாம்என்றும் புலிகளின் மறைவிடங்களில் மட்டும் முக்கிய தாக்குதல்கள் நடாத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும்மனிதாபிமானரீதியில் பணிபுரிந்தால்இந்த வருடமே யுத்தத்தில் வெற்றி பெறலாம் எனவும் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் கொள்கை நோக்கங்களுடன் தாயகத்திற்கு செயலாற்றவும், மற்றவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் பணிபுரியவும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள

( 3ஆம் பக்கம் பார்க்க)

## ஹேரத் இந்தியா பயணம்

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இன்று சனிக்கிழமை இந்தியாவிற்கு செல்லவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு இந்தியா செல்லும் ஹேரத் புதுடில்லியில் திங்கட்கிழமை ஆரம்பமாகும் இந்திய-இலங்கை கூட்டு கமிஷனின் கூட்டத்தில் பங்கேற்பார் என்றும்,

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மாதவ்சிங்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மூலம் பாடசாலைப் புத்தகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளதாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் துரித சிங்களக் குடியேற்றம்

திருக்கோணமலை நகரப் பகுதியும் தமிழ் மக்கள் வாழும் ஏனைய கிராமப் பகுதிகளும் துரிதமாகச் சிங்கள மயமாக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் பெரும் தொழிற்சாலைகள், வர்த்தகக் களஞ்சியங்கள் என்பன அமைக்கப்பட்டு வருவதாகவும், நகரத்தில் வர்த்தக வலயம் ஏற்படுத்தப்பட்டுவருவதாகவும்இவற்றின் மூலம்சிங்கள மயமாக்கல் தொடர்ந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழ் மக்களையும் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற்றி வருவதாகவும் தெரியவருகின்றது.

## தெல்லிப். உ. அ. அ. பிரிவு மீட்புநிதி செலுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை உ. அ அ. பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரிடம் இருந்து வரும் திங்கட்கிழமை 6 ஆம் திகதி பிற்பகல் 2.30 - 4.00 மணிவரை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் தமிழீழ மீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியைச் சேர்ந்தோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## மூதூரில் சுற்றிவளைப்பு

மூதூர் பகுதியிலிருக்கும் கட்டைப்பறிச்சான், சேனையூர் பகுதிகளில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புக்களையும் தாக்குதல்களையும் தொடர்ந்து நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். பயணத்தை கைவிடவில்லை

# பத்திரிகையாளரிடம் தொண்டமான்

## டிச.8-ல் வளலாய்மோதலில் சிறிலங்கா மேஜர் பலி

(கொழும்பு)

கடந்த டிசம்பர் எட்டாம்

மேஜர் கமில் ஹாசோஜி திலகரட்னா என்னும் இவ்வதி

ஹேரத் இன்று சனிக்கிழமை இந்தியாவிற்கு செல்லவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து நாள் பயணம் மேற்கொண்டு இந்தியா செல்லும் ஹேரத் புதுடில்லியில் திங்கட்கிழமை ஆரம்பமாகும் இந்திய-இலங்கை கூட்டு கமிஷனின் கூட்டத்தில் பங்கேற்பார் என்றும்,

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மாதவ்சிங்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மூலம் பாடசாலைப் புத்தகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளதாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் துரித சிங்களக் குடியேற்றம்

திருக்கோணமலை நகரப் பகுதியும் தமிழ் மக்கள் வாழும் ஏனைய கிராமப் பகுதிகளும் துரிதமாகச் சிங்களமயமாக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் பெரும் தொழிற்சாலைகள், வர்த்தகக் களஞ்சியங்கள் என்பன அமைக்கப்பட்டு வருவதாகவும், நகரத்தில் வர்த்தக வலயம் ஏற்படுத்தப்பட்டுவருவதாகவும்இவற்றின் மூலம்சிங்கள மயமாக்கல் தொடர்ந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழ் மக்களையும் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற்றி வருவதாகவும் தெரியவருகின்றது.

## தெல்லிப். உ. அ. அ. பிரிவு மீட்புநிதி செலுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை உ. அ அ. பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரிடம் இருந்து வரும் திங்கட்கிழமை 6 ஆம் திகதி பிற்பகல் 2.30 - 4.00 மணிவரை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் தமிழீழ மீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியைச் சேர்ந்தோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## வருட இறுதிக்குள் வெல்ல முடியுமாம்

(கொழும்பு)

சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கடந்தவாரம் வடபகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை நேரில் சென்று பார்வையிட்டதோடு, யுத்தத்தின் போது இராணுவத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் யுத்த தந்திரோபாயங்கள் பற்றியும் படை அணிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இந்தப் பயணத்தின் போது அவர் பலாலி, ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, மன்னார், தள்ளாடி, நானாட்டான், சிலாவத்துறை, தலைமன்னார், கொண்டச்சி, பூநகரி, ஆனையிறவு, திரியாய் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களுக்கு விஜயம் செய்தார். அங்கு இராணுவத்தினர் மத்தியிலும்உரையாற்றினார்.

ஆயுதங்கள் வாங்க அரசு ஒவ்வொரு ஆண்டும் அதிகமான பணம் செலவிடுகிறது. ஆகவே தேவை அற்ற துப்பாக்கிச் சூடு நடாத்த வேண்டாம் என்று இராணுவத்தளபதிஹமில்டன்வனசிங்காதனது இராணுவப் படையணிக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கெதிராக நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் இராணுவ தளபாடங்களை விரயமாக்க வேண்டாம்என்றும் புலிகளின் மறைவிடங்களில் மட்டும் முக்கிய தாக்குதல்கள் நடாத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும்மனிதாபிமானரீதியில் பணிபுரிந்தால்இந்த வருடமே யுத்தத்தில் வெற்றி பெறலாம் எனவும் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினரும், பொலிசாரும் கொள்கை நோக்கங்களுடன் தாயகத்திற்கு செயலாற்றவும், மற்றவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் பணிபுரியவும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள

( 3ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் சுற்றிவளைப்பு

மூதூர் பகுதியிலிருக்கும் கட்டைப்பறிச்சான், சேனையூர் பகுதிகளில் இராணுவத்தினர் சுற்றிவளைப்புக்களையும் தாக்குதல்களையும் தொடர்ந்து நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். பயணத்தை கைவிடவில்லை

# பத்திரிகையாளரிடம் தொண்டமான்

## இப்போது செல்வதில் பயனில்லை

யாழ்ப்பாணத்துக்குத் தான் மேற்கொள்ளவிருக்கும் உத்தேச பயணத்தை ரத்துச்செய்யவில்லை என்று நேற்றுமுன் தினம் அமைச்சர் எஸ்.தொண்டமான் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அவர், நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமுன் நான் சமர்ப்பித்த ஆலோசனைகள் பற்றிய 'பகிரங்க விவாதம்' தணிந்துபோக வேண்டும். எப்படியாயினும் நான் விடுதலைப் புலிகளுக்கு ஏதாவது சொல்லும் நிலையில் இருக்கவேண்டும். ஒரு முடிவும் இல்லாமல் அங்கு செல்வதால் எவ்வித பயனுமில்லை என்றார்.

தனது ஆலோசனைகள் தொடர்பான விவாதம் சூடுபிடித்திருப்பது குறித்துத்தான் மகிழ்ச்சி அடைவதாக அமைச்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டாவின் திட்டத்தைப் பயன்படுத்தி

## இனவாதத்தைத் தூண்டி அரசியல் லாபம் தேடமுயற்சி

- ஒஸி அபயகுணசேகர

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளைப் பயன்படுத்திபல அமைப்புக்களின் தலைவர்கள் இனவாதத்தைத்தூண்டிஅதில் அரசியல் இலாபம் தேடமுயற்சிக்கின்றனர்.

இவ்வாறு இலங்கை மக்கள் கட்சியின் சார்பில் மேல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா முயற்சிக்கு அஸ். பீடாதிபதி வாழ்த்து

(கண்டி)

இ.தொ.கா.தலைவர் எஸ். தொண்டமானின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறவேண்டும் என அஸ்கிரிய பீடாதிபதி பரிப்பான சந்தானந்ததேரோ வாழ்த்துத்தெரிவித்துள்ளார்.

கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இவர் தன்னைச் சந்தித்த தொண்டமானிடம் இதனைத் தெரிவித்தார்.

தொண்டமானைச் சந்திப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மகசின் சிறையில் 200 தமிழர்கள்

உரிய வகையில் நீதி விசாரணை எதுவுமின்றி இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ்அரசியல் கைதிகள் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்எனவும், அநாவசியமாக இவர்கள் சொல

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நானாட்டானில்

## கண்ணிவெடித் தாக்குதல்; பல இராணுவத்தினர் பலி

மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டான் சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வங்காலை இராணுவ முகாம் நோக்கிச்சென்ற இராணுவ வாகனம் ஒன்றின் மீது கண்ணிவெடித்தாக்குதல்நடாத்தப்பட்டுள்ளது. நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடாத்திய இத்தாக்குதலின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தெரிகின்றது. எனினும் மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லை.

## இராணுவத்தினர் தேடுதல்; இளைஞர் சுட்டுக்கொலை

திருக்கோணமலைநகருக்குச் சமீபமாக இருக்கும் பாலையூற்று, கல்லடிப்பற்றை ஆகிய இடங்களை சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்திய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது தமிழ்இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் சிலர் காயமடைந்துள்ளனர்.

## டிச. 8-ல் வளலாய்மோதலில் சிறிலங்கா மேஜர் பலி

(கொழும்பு)

கடந்த டிசம்பர் எட்டாம் திகதியன்று அச்சுவேலி வளலாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மேஜர்தரத்திலான அதிகாரிஒருவர் கொல்லப்பட்டார்

மேஜர் கமில் ஹாசோஜி திலகரட்னா என்னும் இவ்வதிகாரி 17மார்ச்86ல் சிறிலங்கா இராணுவத்தில் தன்னை இணைத்துக்கொண்டுபல தாக்குதல்களில்பங்கேற்றவர்எனத் தெரியவருகின்றது.

## புளொட் துப்பாக்கிச் சூடு; இளைஞர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பேயாடி கூழாங்குளம் பகுதியில் புளொட் குழுவினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

பறநட்டகல் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் என்ற இளைஞரே காயமடைந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி குழுவினர் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதே நாள் முதலாம் திகதி காலை தேவர்குளம் என்ற இடத்தில் உள்ள காட்டுப் பகுதியில் பொம்மர், அவ்ரோ விமானக் குண்டுவீச்சுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மூன்று பொம்மர்களும் அவ்ரோ விமானம் ஒன்றும் இத்தாக்குதலில் ஈடுபட்ட போதிலும் எவரும் பாதிக்கப்படவில்லை. (தி)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

பருத்தித்துறை இறங்குதுறையை நேற்று வந்தடைந்த குமணா கப்பலில் யாழ். செயலகத்திற்கு டிசம்பர்மாத ஓய்வூதிய வவுச்சர்கள் வந்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. இக்கப்பலில் தபால் பொதிகள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலியும் திதி அறிவித்தலும்



வீர ஜனனம் 13 - 03 - 1961 வீர மரணம் 14 - 02 - 1987

## கப்டன் வாசு

(உ. சுதாகர்)
தொழில் நுட்பப்பிரிவு பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப்புலிகள்
கைதடி வெடிவிபத்தில் வீரச்சாவு

திதி: 19-02-1992

வீட்டில் இருந்த வீரம்
தோப்பாய் ஆனது படையில்
கோப்பில் நின்ற குடும்பம்
தேய்ந்து உரமாயானது மண்ணில்
ஈழம் காக்க என்று
தேகம் சொரிந்த இரத்தம்
தேசம் முழுதும் சிவக்க
சேவை செய்த தியாகம் — புலிச்
சேனை வெல்ல வைக்கும்



வீர ஜனனம் 06 - 09 - 1962 வீர மரணம் 09 - 08 - 1990

## மேஜர் ஜேம்ஸ்

(உ. ஸ்ரீதர்)
பொறுப்பாளர்
வடமராட்சி, தவகம், வலிகாமம்
அச்சுவேலி விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவு

திவச திதி: 06-01-1992

அண்ணனின் பின்னே
தம்பியும் தங்கையும்
சுதந்திரம் வேண்டி
போர்க்கொடி ஏந்தினர்
ஓர் குடை நின்று
சங்க இலக்கிய
சான்றினை விட இவர்
சரித்திரம் படைத்தவர்
சாதனைக்காக அல்ல
தமிழ் சந்ததி வாழ



## கப்டன் சுந்தரி

(உ. உதயலட்சுமி)
துணைச்செயலர்
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி


## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

01.01.92 அன்று KKS வீதியில் 2 திறப்புகளுடனான கோர்வை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(2068)


## வெளிவாரி மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்கள் இணைந்து ''வெளிவாரி மாணவர் ஒன்றியம்'' என்ற அமைப்பை உருவாக்க இருக்கின்றனர்.

## 1-வது நினைவு அஞ்சலி

வீர ஜெனனம் 10-03-1969



வீர மரணம் 04-01-1991

வீரவேங்கை
**கப்டன் அமலன்**
தம்புத்துரைச்சாமி - விஜயசிங்கம்(விஜயம்)
(வீரமாணிக்கன் தேவன்துறை - மயிலிட்டி)

மயிலிட்டியின் வேங்கையாய் திகழ்ந்தாய் அமலா
எதிரிகளை அழிக்கவே போர்க்களம் புகுந்தாய்
எத்தனை எத்தனை மாவீரரின் பாதையில்
எம்மை விட்டு நீயும் சென்றனையோ
உனது பாதையில் நாமும் அணிதிரண்டு
தமிழீழம் என்னும் பூவை மலரச் செய்வோம்

பெற்றோர், உற்றார், உறவினர்
நண்பர்கள், சகபோராளிகள்

(சி/3733)

## நினைவு கூருகின்றோம் 1992 - 01 - 04

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

❋ **சோமேஸ்** (சோமேஸ்வரன் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

1986 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

❋ **கதிர்காமன் நவரத்தினம** (முறக்கொட்டாஞ்சேனை)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங் ஈப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு பொதுமக்கள்.

1988 ஆம் ஆண்டு அச்செழுவில் இந்தியப்படை

வீர ஜனனம் 13 - 03 - 1961 வீர மரணம் 14 - 02 - 1987

சேவை செய்த தியாகம் — புலிச்
சேனை வெல்ல வைக்கும்



வீர ஜனனம் 06 - 09 - 1962 வீர மரணம் 09 - 08 - 1990

## மேஜர் ஜேம்ஸ்

(உ. ஸ்ரீதர்)

பொறுப்பாளர்

வடமராட்சி, தவகம், வலிகாமம்

அச்சுவேலி விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவு

திவச திதி: 06-01-1992

அண்ணனின் பின்னே
தம்பியும் தங்கையும்
சுதந்திரம் வேண்டி
போர்க்கொடி ஏந்தினர்
ஓர் குடை நின்று
சங்க இலக்கிய
சான்றினை விட இவர்
சரித்திரம் படைத்தவர்
சாதனைக்காக அல்ல
தமிழ் சந்ததி வாழ



வீர ஜனனம் 30 - 03 - 1964 வீர மரணம் 19 - 12 - 1990

## கப்டன் சுந்தரி

(உ. உதயலட்சுமி)

துணைச்செயலர்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

கட்டுவன் நேரடி மோதலில் வீரச்சாவு,

திவச திதி 06-01-1992

பெண்கள் அம்புலி பிடித்ததும்
அடித்தே புலியை துரத்தியதும்
அந்தநாளின் கதைகள்
இன்றோ ஈழத் தெருவில்
இறங்கிப் பாரும்
இவற்றுக் கெல்லாம்
அப்பாற் சென்று
இவளின் தலைமுறை
பாடம் சொல்வதை

**அண்ணன் வரிசை நின்ற இவர்கள்**
**அசைந்த இலட்சிய திசையில் தொடர்ந்தே ...**
**இன்னும் இன்னும் இவர்கள் பின்னால்**
**இறுதி இலட்சியம் வெல்லும் வரையும் ...**
**எங்கள் கைகள் தொடர்ந்தே உயரும்.**

06 - 12 - 1992 திங்கட்கிழமை அன்று மேஜர் ஜேம்ஸ், கப்டன் சுந்தரி ஆகியோரின் தலைத்திதி வைபவம் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தோழர்கள் உற்றார் உறவினர்கள் யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

''சில்லாலை''
வல்வெட்டித்துறை.

பெற்றோர், சகோதர, சகோதரிகள்
மைத்துனர், மருமக்கள், பெறாமக்கள்.

(2060)

வீரவேங்கை

## கப்டன் அமலன்

தம்புத்துரைச்சாமி - விஜயசிங்கம்(விஜயம்)

(வீரமாணிக்கன் தேவன்துறை - மயிலிட்டி)

மயிலிட்டியின் வேங்கையாய் திகழ்ந்தாய் அமலா
எதிரிகளை அழிக்கவே போர்க்களம் புகுந்தாய்
எத்தனை எத்தனை மாவீரரின் பாதையில்
எம்மை விட்டு நீயும் சென்றனையோ
உனது பாதையில் நாமும் அணிதிரண்டு
தமிழீழம் என்னும் பூவை மலரச் செய்வோம்

பெற்றோர், உற்றார், உறவினர்
நண்பர்கள், சகபோராளிகள்

(சி/3733)

## நினைவு கூருகின்றோம் 1992 - 01 - 04

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

❋ சோமேஸ் (சோமேஸ்வரன் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

1986 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

❋ கதிர்காமன் நவரத்தினம் (முறக்கொட்டாஞ்சேனை)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங் ாப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட ஆறு பொதுமக்கள்.

1988 ஆம் ஆண்டு அச்செழுவில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

கப்டன் அருள் மாஸ்ரர் (மாணிக்கம் ரவீந்திரராஜா - 268/21, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்)

சுரேஸ்மாஸ்ரர் (பத்மநாதன் சுரேஸ்குமார் - நீர்வேலிவடக்கு)

இதே ஆண்டு புதுக்குடியிருப்பில் இந்தியப்படையினரின நடவடிக்கையின்போது பலியான எட்டுப் பொதுமக்கள்.

1989 ஆம் ஆண்டு நாவற்குடாவில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

கவாஸ்கர் \ கிருஸ்ணா (சி. தர்மகிருஸ்ணன் நாவற்குடா, மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

கப்டன் அமலன் தம்புத்துரைச்சாமி விஜயசிங்கம் - மயிலிட்டி)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப்புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3732)

### சிந்தனைக்கு

பலமற்ற மேதைகளுக்குச் சந்தர்ப்ப சூழ் நிலைகள் ஆதரவாக அமையும்.

— ஸேம்யல் லவ்வர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 04-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# மரு. பீடத்தை மூட கூட்டுச் சதி

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை தந்திரமான முறையில் யாழ். குடாநாட்டில் இருந்து - வடக்கிலிருந்தே - இடம்மாற்றுவதற்கு முயற்சிகளை பல்கலைக்கழக மானியக்குழு மேற்கொண்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் திட்டங்கள் தங்குதடையின்றித் தொடர்ச்சியாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முகமாக பலரின் ஆலோசனைக்கு இணங்கவே இத்திட்டம் பற்றி ஆலோசனை நடத்துவதாக பல்கலைக்கழகங்களின் மானியக்குழுத் தலைவர் பேராசிரியர் ஏ. பி. ஆர். அலுத்விகாரா யாழ். பல்கலைக்கழக உப வேந்தருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த இடமாற்றத்திற்கு இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள், மருத்துவபீடாதிபதிகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இடம்பெயர்ந்து தமது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுள்ள மருத்துவபீட மாணவர்களினால் ஏற்பட்டுள்ள சுமையைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டமை குறித்து சிங்கள பேரினவாத சக்திகளும் அதே சிந்தனைப்போக்குடைய புத்திஜீவிகளும் ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புத் தெரிவித்தே வந்தனர். யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படும் பல்கலைக்கழகம் தமிழ் தேசியத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதே அவர்களின் திடமான நம்பிக்கையாகும். இதனால் யாழ். பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கு அவர்கள் எப்பொழுதும் முட்டுக்கட்டையாகவே இருந்தும் வந்துள்ளனர்.

இந்நிலையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிச் சூழலைக் காரணம் காட்டி பல்கலைக்கழகத்தின் பிரதான ஒரு பகுதியை மூடிவிடுவதற்கு தற்பொழுது முயற்சிக்கின்றார்கள். அவர்களின் திட்டப்படி யாழ். குடாநாட்டிற்கு வெளியில் மருத்துவபீடத்தைக் கொண்டு செல்லுதல் என்பது தமிழர் பிரதேசத்திற்கு வெளியில் கொண்டு செல்லுதல் என்பதே பொருளாகும். மருத்துவ பீடத்தின் அத்தியாவசிய தேவையான போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் தவிர தமிழர் பிரதேசத்தில் இல்லாமையைக் காரணம்காட்டி தென்னிலங்கையில் அதை நிறுவுவதற்குப் பேரினவாத சக்திகள் நியாயப்படுத்தலாம்.

பேரினவாத புத்திஜீவிகளின் இச் சதிகளுக்கு தமிழினத் துரோகிகளே வடிகால்களாக உள்ளனர். விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எவ்வாறு தமிழினத் துரோக சக்திகள் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றனவோ அதேபோல் பேரினவாத புத்திஜீவிகளின் சதிகளுக்கு சமுதாய நோக்கு எதுவுமின்றி சுயநல நோக்குமட்டுமே கொண்டுள்ள சில தமிழ் 'புத்திஜீவிகளும்' இதேபோன்ற மாணவர்களும் காரணமாகவுள்ளனர்.

இந்நிலையில் பேரினவாத சக்திகளின் இத்திட்டங்களை தமிழர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்க்க வேண்டும். இவ்விட மாற்றத்திற்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் தனது முனைப்பான எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு இடம்பெயர்ந்து கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

# பாடசாலைகளா-டாங்கிகளா? உடன் தீர்மானிக்க வேண்டும்

## 3ஆம் உலகிடம் ஐ. நா. அதிகாரி கோரிக்கை

(மணிலா)

மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளா அல்லது போர்க்கான டாங்கிகளா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். - இவ்வாறு ஐ. நா. அதிகாரி மணிலாவில் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு. என். டி. பி) விசேட ஆலோசகர் மாஹூப் உல்ஹக் மணிலாவில் செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது, மூன்றாம் உலக நாடுகள்கடனைத் திருப்பிக் கொடுக்கும் விடயத்தில் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

மூன்றாம் உலக நாடுகள் இந்தக் கடன்களைத்திருப்பித் தந்ததாக வரலாறு இல்லை. 200 பில்லியன் அமெரிக்க டாலர்களை இராணுவத்துக்குத் தாரை வார்க்கும் மூன்றாம் உலக நாடுகள், பெற்ற கடனைத் திரும்பித் தாமுடியாது என்று சொல்ல நியாயமில்லை. இந்த நாடுகளின் பீடைகள் மெல்லச் செல்வந்த நாடுகளையும் பாதிக்கும் என்றும்-

மூன்றாம் உலக நாடுகள் இராணுவச்செலவினங்களைக் குறைத்து, சமூகநலச் சேவைகளுக்கு அபிவிருத்திக் கொடுப்பனவுகளைச் செலவு செய்தாலே அந்த நாடுகளின் கடனைத் தள்ளுபடி செய்யலாம். கடன் நிலுவைகளைத் தள்ளுபடி செய்வதற்கு உலகளாவிய பேரம் தேவைப்படும் என்றும்-

1992 இல் மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கப்படும் கடன் குறித்துப் புதிய பட்டியல் தயாரிக்கப்படும் என்றும், மூன்றாம் உலக நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தாத ஜி-7 குழு இந்த நாடுகளின் கடனைப் பற்றித் தீர்மானிக்க முடியாது. ஐக்கிய நாடுகள் அமைப்பின்குடையின் கீழேயே கடன் குறித்துத் தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் மாஹூப் உல்ஹக் மேலும் தெரிவித்தார்.

மூன்றாம் உலக நாடுகளின் வறுமைக்கு அந்த நாடுகளே காரணம். 60 பில்லியன் அமெரிக்க டாலர் அபிவிருத்தி உதவியில், மூன்றாம் உலக நாடுகள் எட்டு விகிதத்தை மாத்திரமே மனிதநல முன்னுரிமைச் சேவைகளுக்குப் பயன்படுத்துகின்றன என்று முன்னாள் பாகிஸ்தான்நிதி அமைச்சர் மூன்றாம் உலக நாடுகளைக் குற்றம் சாட்டினார்.

# இளைஞனின் மரணம்; தாயார் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி ஜெயபுரத்தில்கடந்த 25 ஆம் திகதி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கஷ்பார் றெஜினோல்ட் என்ற குருநகர் இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை றெஜினோல்ட்டின் தாயார் தமிழீழ காவல்துறையிற் கொடுத்துள்ளார். (21)

# கொரிய ஜனாதிபதிகள் மார்ச்சில் சந்திப்பு

(லண்டன்)

வடகொரியா, தென்கொரியா ஜனாதிபதிகள் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உச்சிமகாநாட்டில் சந்தித்துப் பேச இணங்கியுள்ளார்கள் என பி.பி.ஸி. அறிவித்துள்ளது.

இந்த இரு நாடுகளின் எல்லைப் பகுதியிலுள்ள ஹெப்கான் என்ற நகரத்தில் இந்த இரு தலைவர்களும் சந்திப்பார்கள் என்றும்-

கொரியா இரண்டும் மீண்டும் இணைய வேண்டும் என்று இவர்கள் புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளனர் என்றும்பி.பி.ஸிதெரிவித்தது.

# தமிழருக்கு நஷ்டஈடு; தெலுங்குதேசம் கோரிக்கை

(சென்னை)

கர்நாடக மாநிலத்திலிருந்து வெளியேறும் தமிழர்களுக்கு இழப்பீடுவழங்கி, அம்மாநிலத்தில் அவரவர்கள் வதிவிடங்களில் மீளவும் குடியமர்த்தக் கர்நாடக அரசு முன்வரவேண்டுமென்று அம் மாநிலமுதல்வர் பங்காரப்பாவை தெலுங்குதேசக் கட்சித் தலைவர் என். டி. ராமராவ் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் உதகமண்டலத்தில் செய்தியாளரிடம் பேசிய ராமராவ், கிருஷ்ணா ஆற்று நீர்ப் பங்கீடு குறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழு ஒன்றை அமைத்து தீர்வுகண்டதுபோல காவிரி நீர்ப் பிரச்சினைக்கும் உச்சநீதிமன்ற நீதிபதிகள்குழுவொன்றை அமைத்துத் தீர்வுகாணவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

---

தற்காலிக

தோர் மேற்படி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் இவர்களுக்கு செலவுப் படியாக 500 ரூபா வழங்கப்படுமெனவும் கடந்த முதலாம் திகதி ஈழநாதம் செய்தி வெளியிட்டது தெரிந்ததே. இது பற்றிய மேலதிக விபரங்கள் வருமாறு. விண்ணப்பத்தாரிகள் விண்ணப்பப் படிவத்தை தாமே இரு பிரதிகளாகத் தயாரித்து ஒன்றை அண்மையிலுள்ள கொத்தணி அதிபரிடமும் மற்றையதை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுவோர் அண்மையில் பதவி வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர்.

இவர்களுக்கு எழுத்துப் பரீட்சை எதுவும் நடைபெற மாட்டாது. நேர்முகப் பரீட்சை மட்டுமே நடைபெறும். விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இருபதாம் திகதியளவில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும். இதன்போது இவர்கள் சகல ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோர் விரும்பினால் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். பின்பு தொண்டர் ஆசிரியர் நியமனம் கிடைக்கும் பட்சத்தில் இப் பதவியிலிருந்து விலகலாம் தற்காலிக ஆசிரியர் பதவி தொண்டர் ஆசிரியர் நியமத்தை பாதிக்காது எனவும் அவ் வதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

---

யாழ்.

சர் தொண்டமான் தெரிவித்தார். மக்களது அபிப்பிராயங்களையும் உணர்வுகளையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் விவாதம் வளருவது எனது விருப்பமாகும். எல்லோரும் வாதப் பிரதிவாதங்களில் கலந்துகொள்கிறார்கள் என்றார் அவர்,

எனது ஆலோசனைதொடர்பான விவாதங்கள் விடுதலைப் புலிகள் பிரச்சினையை அணுகுவதற்கு உதவியாக அமையும் என்றார் அவர்.

எந்த ஒரு அரசியல் கட்சியும் தனது ஆலோசனையை எதிர்க்கவில்லை என்பதை அமைச்சர் வலியுறுத்தினார். வாசுதேவா நாணயக்கார கூட புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதை ஆதரிக்கிறார்.

தம்மை வரவேற்பதற்கான சகல ஒழுங்குகளும் பூர்த்தியாகிவிட்டன என்று புலிகளும் தெரியப்படுத்தினார்கள்.

நாட்டில் சமாதானம்வேண்டும். எனது ஆலோசனைகள் ஏற்புடையதல்ல என்று கூறுபவர்கள் மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். எனது திட்டத்திற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்காமல் எனது திட்டத்தைச்ச தாரணமாக விமர்சிக்கிறார்கள். நான் ஒரு திட்டத்தை மாத்திரம் தயாரிக்கவில்லை. அந்தத் திட்டத்தை ஏற்குமாறு புலிகளைக்கோர யாழ்ப்பாணமும் நான் போகவிருக்கிறேன்.

---

ஜெனரல்

வேண்டும் என்றும்-

இவ்வாறு அவர்கள் செய்தால் இந்த வருடம் யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்றும் முதலில் நாம் மனிதர்கள் என்பதை கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும்- அவர் தெரிவித்தார்.

---

- இவ்வாறு கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அனுமதியுடன் தான் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாகத் தொண்டமான் செய்தியாளரிடம் தெரிவித்தார். ஆனால் அமைச்சர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற முறையில் இச் செயலைத் தொடங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளை நம்பலாமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், ஒரு பக்கத்தை மாத்திரம் நாங்கள் குறை சொல்லக் கூடாது. பண்டாரநாயக்கா- செல்வநாயகம் உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்தியிருந்தால், இந்தப் பிரச்சினை இந்த அளவுக்குப் பெரிதாகியிருக்காது. இந்திய - சிறிலங்கா உடன்பாடும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதல்ல என்றார்.

இப்போது இதற்கான தீர்வைக் காணாவிட்டால், பிரச்சினை மோசமடைந்து விடும் என்று அவர் எச்சரித்தார்.

அமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தின் போது புலிகள் அவரைக் கடத்திச் சென்று விடுவர் எனச் சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளை அவர் மறுத்தார். அவர்கள் அப்படிக்கற்பனை செய்கிறார்கள் என்றார்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது யுத்த நிறுத்தம் ஒன்று சாத்தியப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நான் யுத்த நிறுத்தத்தைக் கோரவில்லை என்றார்.

# 300 இலங்கைத் தமிழர்கள் பாங்கொக்கில் கைது

(பாங்கொக்)

தாய்லாந்து பாதுகாப்புப் படையும், குடிவரவுப் பிரிவு அதிகாரிகளும் நடத்திய தேடுதல் வேட்டையில் பல இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைதாகியுள்ளனர். ஈழம் பிரிவினைவாத இயக்கத்தைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் கமீர் எதிர்ப்பு அமைப்பிடமிருந்து ஆயுதக் கொள்வனவு செய்ய முயற்சித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த நடவடிக்கை என்று தாய்லாந்து தரப்பில் சொல்லப்படுகிறது.

இதேவேளை ராஜீவ்காந்தி கொலையுடன் தென்கிழக்கு ஆசியாவில் தொடர்பு உண்டா என்ற இரகசிய விசாரணை ஒன்றை சமகாலத்தில் பாங்கொக்கில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

அண்மையில் முடிவடைந்த உலக வங்கி, சர்வதேச நாணய நிதியக் கூட்டங்களின் முன், பாதுகாப்புக் காரணங்களுக்காக தாய்லாந்துப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் சுமார் 300 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

இலங்கைத்தமிழர்கள் அங்கு கைதான பிறகு பாங்கொக் பாதுகாப்புப் படையினர் இலங்கைத் தமிழர்களின் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## எகலியகொட ஆஸ்பத்திரி; தமிழ் கர்ப்பிணி மரணம்

(கொழும்பு)

இரத்தினபுரி எகலியகொட மருத்துவமனையில் பிரசவத்திற்காகசென்றதமிழ்கர்ப்பிணிப் பெண் வாட்கட்டடத்துக்கு வெளியே உள்ள மரம் ஒன்றில் சடலமாக காணப்பட்டார். இவர் கொலை செய்யப்பட்டாரா? தற்கொலை செய்து கொண்டாரா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இத் தமிழ்ப்பெண்மணி 45 வயது உடையவர். இவர் இவ் வாறுமரத்தில் தொங்கியதைத் தொடர்ந்து எகலியகொட மருத்துவமனைக்கு கர்ப்பிணிப் பெண்கள் செல்ல அஞ்சுகின்றனர்என செய்திகள் கூறுகின்றன.

---

மகசீன்

லொணாக் கஷ்டங்களுக்கும், மன வேதனைக்கு முள்ளாகி வருகிறார்கள் என்றும் தெரிய வருகின்றது.

இத் தமிழ்அரசியல்கைதிகள் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இவ்வான கூறப்பட்டுள்ளது

---

ஹேரத்

சோலங்கியையும், பிரதமர் பி. வி. நரசிம்மராவையும் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரிவிச்கப்படுகிறது.

மேலும் இரு நாடுகளுக்கிடையிலான அரசியல் வேறுபாடுகள் தொடர்பாகவும் தென்னிந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்பும் விடயம் தொடர்பாகவும் உத்தியோகபற்றற்ற பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவிருக்கிறார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

கப்பல்

பாடசாலை மாணவர்களுக்கான 250 மெற்றிக் தொன் பாடப் புத்தகங்களும் பாடசாலை உபகரணங்களும் நாளை அல்லது நாளை மறுதினம் இங்குவந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

---

தொண்டா

பதில் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த அஸ்கிரிய பீடாதிபதி அவரது சமாதான முயற்சிகள் வெற்றி பெறவேண்டும் என்றும் வாழ்த்தினார்.

ஒரு சில அரசியல்வாதிகளின் நடவடிக்கையினாலேயே நாட்டில் சமாதானம் இல்லாமல் போய்விட்டது என்றும்,

மக்கள் சாந்தி, சமாதானத்துடன் வாழவே விரும்புகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன்அமைச்சர்தொண்டமான் மல்வத்தை மஹாநாயக்க தேர ரான ரபுக் கல விசித்தி தேரோவையும் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

---

இனவாதத்தை

மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர்ஒஸிஅபயகுணசேகரா விடுத்திருக்கும் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் குறித்து தமது கட்சி சார்பில் தமது நிலைப்பாட்டை விளக்கும் வகையில் இச்செய்தியை அவர் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர், அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கும் தீர்வுத்திட்டத்தை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ எமது நோக்கம் அல்ல. எனினும் இதுசம்பந்தமாக தற்போது பல அமைப்புக்களினதும் தலைவர்கள் விடுத்திருக்கும் அறிக்கைகளை அவதானிக்கும்போதுஅவர்கள் சிங்கள இனத்தைப் பாதுகாக்கின்றோம்என்ற குரலில்இனத்துவேசத்தைத் தூண்டுகிறார்கள் என்பதைப்புரிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் இவர்கள் இவ்விதம் இனவாதத்தை தூண்டி அதில் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்

---


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை

**உள்ளூர் உற்பத்தி அமுலாக்கும் உத்தியோகத்தர்**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான அனுபவம், ஆற்றல், கல்வித் தகைமை உள்ளோர் 10.01.1992 க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை 13.01.92 முற்பகல் 10.00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
02.01.92 (சி/3734)

கௌரவ செயலாளர்



**31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்**



தோற்றம்
17-06-1916

மறைவு
06-12-1991

**திரு. ந. பிள்ளையாகுட்டி**
(மயிலிட்டி)

'தந்தை மகற்காற்றும் உதவி அவையகத்துள் முந்தியிருக்கச்செயல்'
பெற்றுப்பேணிகாத்துஅன்புறய்தாலாட்டிவளர்த்தவரே
ஒரு கணமும் எங்கள் உள்ளத்தை விட்டு நீங்காத தந்தையே
எங்கள் வாழ்வு வளம் பெற சிறந்த வழிகாட்டியாய் இருந்த களஞ்சியமே
எங்களுக்காக வாழ்ந்தவரே எங்கள் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கிறோம்

நாளை 5-1-92 ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்
பேறாமக்கள், பேரப்பிள்ளைகள்

விக்கினேஸ்வரா ஒழுங்கை,
கேணியடி,
நெல்லியடி. (2067)


## பிளாஸ்ரிக்பொருள்களுக்கு தாண்டிக்குளத்தில் தடை

(வவுனியா)

ஜனவரி முதலாம்திகதிதொடக்கம் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வடபகுதிக்கு பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் கடதாசிப் பெட்டி போன்றவை கொண்டு செல்லப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி மேற்படி பொருள்களை வடபகுதி நோக்கிக் கொண்டு வந்தவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (தி)

## பயங்கரக் கோஷ்டி மோதல் ஆறு பேர் படுகாயம்

கொடிகாமத்தில் நேற்றுமாலை பயங்கர கோஷ்டிமோதல் ஒன்று இடம்பெற்றது. இதில் ஆறு பேர் படுகாயம் அடைந்தனர். இருவர் யாழ். பெரியாஸ்பத்திரி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமாலை 4 மணிக்குக் கொடிகாமம் தவசிக்குளப் பகுதியில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையில் திடீரென மோதல் மூண்டது. கத்தி, வாள், கோடரி எனப்பல ஆயுதங்களும் இந்த மோதலில் பயன்படுத்தப்பட்டன.

பெண் விவகாரம் ஒன்றே இந்த மோதலுக்குக் காரணம் என நேற்றுக் காயமடைந்தவர்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு: எம். கனகராசா (வயது 37), ரவிந்திரராசா (வயது 35), ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பாஸ்கரன் (வயது14), சரோஜினி தேவி (வயது 32), சிறீ (22 வயது), ரூபன் (19 வயது) ஆகிய அறுவருமே இம்மோதலில் காயமடைந்தோராவர். இம்மோதலில் சுமார் 15 பேர் வரையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க) லோ)

## உழவு பழக்கப்பட்ட மாடுகள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

உழவு பழக்கப்பட்ட இருபத்தைந்து சோடி நாம்பன் மாடுகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன. கால்நடை வளர்ப்போரிடமிருந்து நியாய விலைக்கு வாங்கப்பட்ட நாம்பன் மாடுகளே உழவுக்கேற்ற விதத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் பழக்கப்பட்டு எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதி காலை பத்து மணிக்கு புளியங்குளம் கந்தசாமி கோவில் முன்பாக ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை மற்றும் எரிபொருள், உதிரிப்பாக தடையால் விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ள இந்த வேளையில் இந்த உழவு மாடுகள் விவசாயிகளுக்கு நிறைவைத்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**பவுண் விலை குறைப்பு**

எமது ஸ்தாபனத்தில் 4-1-1992 முதல் விலைப்பட்டியலில் பவுண் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| தரம் 22 | கரட் | 5300 ரூபா |
| தரம் 21 | கரட் | 5000 ரூபா |
| தரம் 20 | கரட் | 4800 ரூபா |
| தரம் 18 | கரட் | 4400 ரூபா |

தமிழ்ப்பரிதி நகை மாடம்
இல. 15, புதிய சந்தை.
சாவகச்சேரி (சி/2071)



1992 ஆம் ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் யாவும்

**தை 5 முதல்**

**யூனிவேர்சல்**

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி/3723)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.